2016 ஆகஸ்ட் 23]

95—

மின்மாற்றி

***659—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, அ.சாத்தாங்குளம் ஊராட்சி, சகாயபுரம் உள்வாய் ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் மாயநேரி ஆகிய கிராமங்களில் கூடுதல் மின்மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, தனது தொகுதியில் நடைபெறுகின்ற பணிகளைப்பற்றித் தெரியவில்லை என்று நினைக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மக்கள் கேட்பதற்கு முன்பாகவே, மக்களுக்காகப் பணியாற்றிக்கொண்டிருக்கிற அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு எடுத்துக்காட்டாக, சகாயபுரம் பகுதியில் அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும் 2, 3 நாட்களில் அங்கு மின்மாற்றி அமைக்கும் பணிகள் முடிய இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில் திருப்தியாக இருக்கிறது. ஒரு இடத்தில் அதிகமாக மின்மாற்றிகள் அமைக்க ஏற்பாடுகள் செய்து கொண்டு இருக்கின்றீர்கள். இருந்தாலும், அ.சாத்தாங்குளம் ஊராட்சி, சகாயபுரம் உள்வாய் ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் மாயநேரி ஆகிய மூன்று இடங்களில் இந்தப்*

பிரச்சினை இருக்கின்றது. 100 கிலோவாட் அளவிற்கு மின்சாரம் அங்கே இருந்தாலும்கூட, சரியாக மின் சப்ளை இல்லை. அங்கு விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக இருப்பதால், அதிக அளவில் விவசாயத்திற்காக மோட்டார்களைப் பயன்படுத்துகிறார்கள். அங்குள்ள மக்களுக்குக் குடி தண்ணீர் கிடைப்பதில்கூட சில சமயங்களில் பிரச்சினைகள் இருக்கின்றன. சில நேரங்களில் நான்கு நாட்கள்கூட குடி தண்ணீர் வராத சூழ்நிலை இருக்கிறது; மின்சாரம் சரியாக வருவது இல்லை. அதிகமாக விவசாயிகள் மோட்டார்களைப் பயன்படுத்துவதால் இந்தப் பிரச்சினை இருப்பதாக பொது மக்கள் எங்களிடம் குறை கூறுகிறார்கள். எனவே, தமிழக அரசு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து, கூடுதலாக இன்னும் ஒன்றிரண்டு மின்மாற்றிகளை அங்கு அமைத்து, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மின்சாரம் இல்லாமல் தண்ணீர் பிரச்சினை இருக்கிறதென்று கூறுகிறார். அது தவறான தகவல். அந்தப் பகுதிகளில் விவசாயிகள் மின் மோட்டார்களை அதிகமாக வைத்திருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் தேவையான அளவிற்குத் தண்ணீர் அதிகமாக எடுக்க முடியவில்லையென்று அவரே சொல்கின்றார். தேவைக்கும் அதிகமாகவே அங்கே மின் மாற்றிகள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் மின் பளு குறைவாகத்தான் இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சகாயபுரம், ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் மாயநேரி ஆகிய பகுதிகளில் பிரச்சினை இருப்பதாகச் சொல்கிறார். மாண்புமிகு அம்மா அவர்கள், சகாயபுரம் பகுதிக்கும் மீண்டும் ஒரு 100 KV மின் மாற்றி அமைப்பதற்கு ஆணையிட்டபோதே, பிற பகுதிகளிலும் அமைப்பதற்கு ஆணையிட்டுவிட்டார்கள். அதற்கான பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் 30-09-2016-க்குள் முடிந்துவிடும். அதன்பிறகு அந்தப் பிரச்சினை இருக்காது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில பகுதிகளில், மின் பளு குறைவாக இருக்கின்றது என்று சொல்கிறார்.*

2016 ஆகஸ்ட் 23]

ஏதாவது ஒரு பகுதியை அவர் குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக ஆய்வு செய்து, அதுபோன்ற பிரச்சினை ஏதேனும் இருந்தால், உடனடியாகத் தீர்க்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்தைப் பொறுத்தவரையில், line loss மின் இழப்புதான் மிகப்பெரிய சவாலாக இருக்கிறது. அதுவும் குறிப்பாக, LT line—தாழ்வழுத்த மின் பாதையில்தான் அதிக line loss ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். HT line உயர் அழுத்த மின் பாதையில் அந்த அளவிற்கு அதிகமாக line loss ஏற்படுவதில்லையென்றும் சொல்கிறார்கள். அதற்குக் காரணம், தாழ்வழுத்த மின் பாதையில் அதிக அளவில் கம்பங்களைப் போட்டு, அதிக தூரம் மின்சாரத்தைக் கொண்டு செல்வதால்தான், அந்த நிலைமை ஏற்படுகிறதென்று சொல்கிறார்கள். எனவே, இந்த நிலைமையை மாற்ற வேண்டுமானால், குறைந்த capacity-ல், 16 KVA, 25 KVA, 40 KVA, 63 KVA என்கின்ற அளவிற்கு மின்மாற்றிகளை—single pole transformer-களை அதிக அளவில் ஏற்படுத்துவதன்மூலம் line loss-ஐக் குறைக்கலாம் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. அதை மின்சார வாரியத்தின்மூலம் இப்போது பரீட்சார்த்தமாக நகராட்சிப் பகுதிகளில் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன். எனவே, கிராமப் பகுதிகளிலும், line loss-ஐக் குறைப்பதற்கு, இதேபோன்ற single pole transformer-களை, அதிக அளவில் அமைப்பதற்கு மின் வாரியம் முன்வருமா? அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, line loss என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலேதான் குறைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு sub-station-க்கும்

மற்றொரு sub-station–க்கும் 10 கிலோ மீட்டர் தூரம் இடைவெளி இருக்கின்றபொழுது, line loss ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலேதான், இப்பொழுது அதிகப்படியான துணை மின் நிலையங்களை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் single pole transformers அமைத்து, பரிசோதனை செய்ய முடியுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். எப்பொழுதுமே குறிப்பிட்ட ஒரு பகுதியிலே இருக்கின்ற மின்மாற்றியில், எந்த அளவிற்கு மின் பளு இருக்கிறது என்பதைக் கணக்கிடுவார்கள். மின் பளு 70 சதவிகிதத்திற்கு மேல் இருந்தால், கூடுதலாக மின்மாற்றியை அமைப்பார்கள். மின்மாற்றியை ஒரே நாளில் அமைத்துவிட முடியாது. ஏனென்று சொன்னால், HT line ஆக இருந்தாலும் சரி, LT line ஆக இருந்தாலும் சரி, அந்த line–களில் கம்பங்கள் நடப்பட்டு, transformer–உடன் இணைக்கப்பட கிட்டத்தட்ட ஒன்றிரண்டு மாதங்கள் ஆகலாம். ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியில் அதுபோன்று இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டி சுற்றுலாத்தலமாக விளங்கி வருகிறது. ஊட்டியில் Parson Valley கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அங்கு மழை மற்றும் காற்று வீசும் காலங்களில் அடிக்கடி மரங்கள் விழுந்து, மின்சாரக் கம்பிகள் சேதமடைவதால், கிட்டத்தட்ட 8, 10 நாட்கள் இடைவெளியில்தான் ஊட்டியில் குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் அடிக்கடி மரங்கள் விழுவதால், மின்வெட்டு ஏற்படுகிறது. எனவே, தயவு செய்து குப்பைக்குழி என்ற இடத்திற்கு அருகில் cable wire–களை அமைத்து, மின்சாரத்தை தங்குதடையின்றி வழங்கி குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்ற பகுதிகளில் எப்பொழுதுமே குடிநீர்ப் பிரச்சினை இருக்கக்கூடாது என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி தனி லைன் அமைக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதுபோன்ற பகுதிகளில் குடிதண்ணீருக்காக* dedicated power *கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வனப் பகுதியில் அடிக்கடி மழை பெய்கின்ற காரணத்தினாலும், காற்றினால் மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுகின்ற காரணத்தினாலும், பல நாட்களுக்கு மின் தடை ஏற்படுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். மின் புதைவடம் அமைப்பதற்கு சாதாரணமாக நான்கு மடங்கு செலவாகும். மேலே மின்சாரக் கம்பியைக் கொண்டு செல்வதற்கு ஒரு மடங்கு செலவாகும் என்றால், பூமிக்கடியில் கொண்டு செல்வதற்கு 4 மடங்கு செலவாகும். அதுமட்டுமல்ல; உறுப்பினர் சொல்கின்ற பகுதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை உடனடியாக சரி செய்ய முடியாது. அதற்கு மத்திய அரசின்* Ministry of Environment and Forests*–லிருந்து அனுமதி பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே குடிதண்ணீர்ப் பிரச்சினை இருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பகுதியில்* dedicated power *இருக்கும் என்று நினைக்கின்றேன். அப்படி இல்லாதபட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுசென்று, முன்னுரிமையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்கள் நிறைந்த பகுதிகளில் குடிதண்ணீர் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய திட்டம். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் உங்களை அடுத்த கேள்வியின்போது சந்திக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***2488—திரு. அ. ராமு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எமரால்டு வெலிங்டன் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை குன்னூர் நகர் பகுதிக்கும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், குன்னூர் நகராட்சியில் இந்திய பாஸ்டியர் நிறுவனம் மற்றும் வெலிங்டன் இராணுவ நிலையம் ஆகிய பகுதிகளுக்கு எமரால்டு அணையை நீராதாரமாகக்கொண்டு ரூ.95.30 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் குன்னூர் நகராட்சிப் பகுதிக்கான குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 40 கோடியே 19 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிருவாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*